DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No. 86 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 8 | நாள் | : | 12.12.2024 |
| பெயர் | : | முருகன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of December 2024.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் வாசுதேவநல்லூரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். கலைஞர் காலனியைச் சேர்ந்த மனோகரனைத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். ஆஜர் எதிரி என் மைத்துனர் மகன் ஆவார். தூரத்து உறவினர் ஆவார். கடந்த 21.10.2017 அன்று பகல் சுமார் 1.30 மணியளவில் வாசுதேவநல்லூர் கலைஞர் காலனி பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து நானும், மனோகரனும் கையொப்பம் செய்தோம். வாசுதேவநல்லூர் போலீசார் அங்கு வந்து படம் வரைந்தார்கள். பின்னர் எழுதிக்கொண்டு கையெழுத்து கேட்டார்கள் கையெழுத்துப்போட்டேன். மாரிச்சாமி இரஞ்சித்தை வெட்டிவிட்டதால் அங்கு வந்து விசாரிப்பதாக கூறினார்கள். நான்

கையொப்பமிட்ட பார்வை மகசர் அ.சா.ஆ-2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் கு.வி**</u>

பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது படித்துக் காட்டினார்கள் கையெழுத்துப்போட்டேன். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கையெழுத்துச் செய்யவில்லை என்றும் நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது போலீசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பமிட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் பெறப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2024.12.12 17:28:55 +0530